**தமிழ் இணையக் கல்விக்கழகம்**
**TAMIL VIRTUAL ACADEMY**

**மேற்சான்றிதழ்க் கல்வி** (Higher Certificate Course)
**HG10 – நிலை I – (Grade 1)**

**நேரடி எழுத்துத் தேர்வு** (Written Examination)

**நவம்பர் – டிசம்பர் 2018**

**நேரம் : 2.30 மணி** **மதிப்பெண் : 75**

**பகுதி – அ**

**I எல்லா வினாக்களுக்கும் ஒரு சொல் / தொடரில் விடை தருக.**
***Answer all questions in a word / line.*** **(10x1 = 10)**

1. நல்லவர் நட்பு எதைப் போன்றது?
2. வள்ளலார் ஏற்படுத்திய அமைப்பு யாது?
3. தாள் என்ற சொல்லின் பொருள் என்ன?
4. திருக்குறள் என்பதற்கு என்ன பொருள்?
5. பட்டுச் சேலைக்குச் சிறப்பு மிக்க ஊர் எது?
6. தமிழ் மண்டபம் எது?
7. நெடில் என்றால் என்ன?
8. சர்.சி.வி. இராமன் கண்டுபிடிப்பின் பெயர் என்ன?
9. ஆகுபெயர் என்றால் என்ன?
10. முக்கனிகளுள் ஒன்று எது?

**பகுதி – ஆ**

**II எவையேனும் பத்து வினாக்களுக்கு ஒவ்வொன்றிற்கும் மூன்று வரிகளில் விடை தருக.**
***Answer any ten questions in three lines each.*** **(10x2=20)**

1. நோபல் பரிசில் எவை எல்லாம் இடம் பெறும்?
2. காஞ்சிபுரத்தில் உள்ள வேறு கோயில்கள் யாவை?
3. வாழைப் பூவின் சிறப்புகள் யாவை?
4. தமிழ்மொழி உதவியால் பயன்பெறும் மொழி யாவை?
5. நாமக்கல் கவிஞர் எவற்றை வாழ்த்துகிறார்?
6. உலக மொழிகளில் செம்மொழிகள் எவை?
7. முதல் எழுத்துக்கள் யாவை?
8. அறிவுடையாரின் நட்பு எதைப் போல இன்பம் தரும்?
9. ஆண்டாள் – ஆசிரியர் குறிப்புத் தருக.
10. அபிராமியை வணங்குவதால் வரும் சிறப்புகள் யாவை?
11. பெயரெச்சம் என்றால் என்ன?
12. அணி என்றால் என்ன?

13. தொழிலாகுபெயர் – விளக்கி உதாரணம் தருக.
14. விகாரப் புணர்ச்சியின் வகைகளைக் கூறுக.
15. உருபுகள் இல்லாத வேற்றுமைகள் எவை?

### பகுதி – இ

**III** **எவையேனும் <u>ஐந்து வினாக்களுக்கு</u> ஒவ்வொன்றிற்கும் <u>ஆறு வரிகளில்</u> விடை தருக.**
***Answer any five questions in six sentences each.*** **(5x4=20)**

1. தமிழ் மொழியின் சிறப்புகளாக முடியரசன் கூறுவன யாவை?
2. பெயர்கள் எப்படியெல்லாம் மாற்றம் பெறுவதாக அப்பா கூறினார்?
3. குமரக்கோட்டம் முருகன் கோவில் பற்றி எழுதுக.
4. திருடர்கள் பயந்து ஓடக் காரணம் யாது?
5. வாழைப்பழத்தின் பயன்களைப் பற்றி நீ அறிந்தவற்றை எழுதுக.
6. பரிதிமால் கலைஞர் – பெயர் மாற்றம் விளக்கம் தருக.
7. புணர்ச்சியின் வகைகளைக் கூறி, உதாரணம் தருக.
8. சார்பெழுத்துகளை எழுதுக.

### பகுதி – ஈ

**IV** **ஏதேனும் <u>ஒன்றனுக்குப் பதினைந்து வரிகளில்</u> விடை தருக.**
***Answer any one of the following questions in fifteen sentences.*** **(1x10=10)**

1. முத்தொள்ளாயிரம் கூறும் கிள்ளியின் வீரச் சிறப்பைத் தொகுத்து எழுதுக.
2. வாழை மரத்தினால் மக்கள் அடையும் நன்மைகளைத் தொகுத்து எழுதுக.
3. உவமை அணியைச் சான்றுடன் விளக்குக.

### பகுதி – உ

**V** **ஏதேனும் <u>ஒன்றனுக்கு மூன்று பக்கக்</u> கட்டுரை வடிவில் விடை தருக.**
***Write an essay in three pages to any one of the questions.*** **(1x15=15)**

1. 'ஏட்டில் படித்ததோடு இருந்துவிடாதே' என்ற பாடல் வழி பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் கூறும் பாடல் கருத்துகளை விளக்கி எழுதுக.
2. தமிழ் உயர்தனிச் செம்மொழியாக பெருமை பெற்றதற்கான காரணங்களைத் தொகுத்து எழுதுக.